04.06.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.6/2026</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்புச்செல்வன் | | |
| த/பெ | ஜெயராமன் | | |
| கிராமம் | திருவெண்ணைநல்லூர் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 51/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 04.06.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். தற்போது எ ன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2- ம் கையெழுத்து என்னுடையது தான். திருவெண்ணைநல்லூர் போலீசார் எங்கள் பகுதிக்கு வந்ததாக ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கி சென்றார்கள். இது சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. பார்வை மகசரில் உள்ள 2- ம் கையெழுத்து அ.சா.ஆ. 2 – ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்கள் ஊரைச் சேர்ந்த விஷாலை என்பரை அருள் மற்றும் சில நபர் கடத்தி சென்ற வழக்கு சம்மந்தமாக திருவெண்ணைநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர்

அவர்கள் கடந்த 23.06.2021 காலை சுமார் 07.30 மணியளவில் அங்கு நின்று கொண்டிருந்த என்னையும், எங்கள் ஊரைச் சேர்ந்த சுந்தரம் என்பரையும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார்கள் என்றும், எங்கள் முன்னிலையில் ஆய்ாவாளர் அவர்கள் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்

றும், அதில் நானும் சுந்தரம் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை

<u>மறுவிசாரணை</u>

இல்லை